# தமிழீழத் தேசியப் படைப்புக்களுக்கான தணிக்கைக் குழுமம்

தமிழீழ அரசியல்துறை

Thamil Eelam National Creative Content Censor Committee - (TEN4C)


2025/04/21

TAT/TEN4C/20250421/002

UNIVERSAL B CATEGORY

## “லிட்டில் யப்னா”

## திரைப்படத்தைத் தணிக்கைக் குழுமம் தடை செய்கிறது.

**தமிழீழத் தேசியப் படைப்புக்களுக்கான தணிக்கைக் குழுமம் “லிட்டில் யப்னா” (Little Jaffna) திரைப்படத்தைத் தடை (Banned) செய்கிறது !**

எங்களுடைய விடுதலைப் போராட்டம் தார்மீகமானது என்பதோடு, எங்களுடைய கோரிக்கைகள் நீதியானவை, எங்கள் மண்ணில் எமது கலை பண்பாட்டு விழுமியங்களைப் பேணியவாறு தன்னாட்சி உரிமைபெற்றுச் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் எங்களது அடுத்தடுத்த தலைமுறைகள் தங்களது சொந்த மண்ணில் விடுதலை பெற்று வாழ வேண்டும் என்பதற்காகவே இந்த உன்னதமான விடுதலைப் போராட்டம் தோற்றம் பெற்றிருந்தது.

எமது விடுதலைப் போராட்டம் இன்று சர்வதேசமயப்படுத்தப்பட்டு, பல சர்வதேச மனிதாபிமான நீதி நிறுவனங்களின் மனக்கதவுகளை தட்டி எழுப்பக்கூடிய ஒரு சூழலை நாம் உருவாக்கியிருக்கின்றோம். இவ்வாறு இருக்கும் போது தற்போது வெளிவந்திருக்கும் “லிட்டில் யப்னா” (Little Jaffna) என்ற திரைப்படம், புலம்பெயர் தமிழினத்தை இழிவுபடுத்தும் ஓர் திரைப்படமாக உருவாக்கப்பட்டுள்ளமை எமக்கு மிகுந்த வருத்தத்தைத் தருகின்றது.

இந்தப் பூமிப் பந்தில் இதுவரை காலமும் நடந்த விடுதலைப் போராட்டங்களில் நடந்திராத பல மகத்தான சாதனைகளும், அதியுச்சத் தியாகங்களும் எமது விடுதலைப் போராட்டத்தில் நிகழ்ந்திருக்கின்றன. உலக விடுதலைப் போராட்டங்களில் நடந்தேறிய, போரியல்ச் சம்பவங்களை ஏற்றுக்கொள்ளும் எம்மவர்கள், எமது விடுதலைப் போராட்டத்தில் அதே நிகழ்வுகள் நடைபெறுவதை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். எவ்வித ஆதாரங்களுமற்ற சம்பவங்களை, தனிப்பட்ட காழ்ப்புணர்வுகளை வெளிப்படுத்துவதற்காக, கற்பனைக் கருத்துக்களைக் கதையாக உருவாக்கி அதனைத் திரைப்படமாக்க முன்வரும் எம்மினத் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சிலர், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நடந்த உண்மைச் சம்பவங்களை அல்லது சிறீலங்கா இனவாத அரசாங்கம் மேற்கொண்ட இன அழிப்புக்களைத் திரைப்படமாக்க மறுக்கின்றனர். தமிழர்களை அழித்துவிட வேண்டும் என்று முனைப்புடன் செயல்படும் நாசகார சக்திகளுக்கு ஆதரவளித்து, சுயலாபம் அடைவதற்காகவே, அவர்கள் வீசிய பொறி வலைக்குள், சில எம்மினப் படைப்பாளிகள் வீழ்ந்து விட்டதை எம்மால் உணரமுடிகிறது. கடந்த காலத்தில் தமிழீழ விடுதலைக்காகவும், தமிழ் சமூகத்தின் முன்னேற்றத்திற்காகவும், பல கலைப் படைப்புக்களை வழங்கிய ஒரு சிலரும், இவர்கள் விரித்த வலையில் சிக்கியிருப்பது எமக்குப் பலத்த ஏமாற்றத்தைத் தருகின்றது.

நீதிக்கான எமது விடுதலைப் போராட்டத்தையும், எமது மக்களின் உணர்வுகளையும், அந்த மக்களின் போர்க்கால வாழ்க்கையும், போருக்குப் பின்னரான சமகால வாழ்வின் வலிகளையும், இழப்புக்களையும் நேர்மையாகத் திரைமொழியில் பேசி, அந்த வலிகளை நேர்த்தியான திரைப் படைப்புக்களாகப் படைக்க வேண்டிய இன்றைய சூழ்நிலையில், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும், பிரான்சு வாழ் தமிழீழ மக்களுக்கும் மாசு விளைவிக்கும் நோக்கத்தோடு, உருவாக்கப்பட்ட “லிட்டில் யப்னா” (Little Jaffna) போன்ற திரைப்படங்கள் எமது மக்களால் நிராகரிக்கப்பட வேண்டிய திரைப்படங்களில் ஒன்றாகும் என்பது எங்களுடைய அழுத்தமான கருத்தாகும்.

TAT/TEN4C/20250421/002

2025/04/21

இந்தத் திரைப்படத்தை, எமது தமிழீழத் தேசியப் படைப்புகளுக்கான திரைப்படத் தணிக்கை குழுமத்தின் பார்வைக்கு உட்படுத்துமாறு பல தடவை கோரப்பட்ட போதும், அந்த முயற்சி இன்று வரை கைகூடவில்லை. இருப்பினும் இந்தத் திரைப்படத்தின் சில விளம்பரத் துண்டுக் காட்சிகளைப் பார்த்ததன் அடிப்படையிலும் மற்றும் இந்தத் திரைப்படத்தின் முன்னோட்டக் காட்சிகளைப் பார்த்தவர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலும், இந்த திரைப்படத்தில் ஈழத் தமிழினத்தின் போர்க் கால, புலம்பெயர் வாழ்வியலைக் களங்கப்படுத்தும் பல விடயங்கள் உள்ளடக்கப் பட்டிருப்பதை நாங்கள் அறிந்து கொண்டோம்.

இந்தத் திரைப்படத்தில் தமிழர்களின் மத நம்பிக்கையைக் கொச்சைப்படுத்துவது, எமது பண்பாட்டுத் தலைநகரில் வாழும் யாழ்ப்பாணத் தமிழர்களை கேவலப்படுத்தல், பிரான்சில் வாழும் எமது வர்த்தகர்களையும், தமிழ் மக்களையும் இணைக்கும் வர்தகச் சந்திப்பு மையமான, குட்டி யாழ்ப்பாணம் என்ற செல்லப் பெயருடன் அழைக்கப்படும், லாச்சப்பலில் மையங்கொள்ளும் தமிழர்களைக் களங்கப்படுத்துவது, தமிழீழ நடைமுறை அரசினால் மக்களுக்காக இயங்கிய தமிழீழப் போக்குவரத்துக் கழகத்தை அவமதிப்பதும், எமது உணர்வுகளோடு கலந்துள்ள தேசிய அடையாளங்களின் மேன்மைக்குப் பங்கம் விளைவிக்கும் வரலாற்றுப் பதிவாக இத் திரைப்படம் அமைந்துவிடுமென நாம் உறுதிப் படுத்துகின்றோம்.

அத்தோடு, கடின உழைப்பால் உயர்ந்த பிரான்சு வாழ் தமிழ் இளைஞர்களை, வன்முறைகளைத் தூண்டுபவர்கள் போலவும், திருவிழாவில் நகை திருடும் திருடர்களாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளமை எமக்கு மிகுந்த வேதனையளிக்கிறது. இது போன்ற உண்மைக்குப் புறம்பான பல விடயங்கள் கதையாக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டு பிரெஞ்சு மக்கள் மனங்களில், ஈழத் தமிழர்கள் தொடர்பான கசப்புணர்வை விதைக்கும் நோக்கோடு, இந்தத் திரைப்படம் உருவாக்கப்பட்டுள்ளதால், எமது தமிழீழத் தேசியப் படைப்புக்களுக்கான தணிக்கைக் குழுமம் “லிட்டில் யப்னா” (Little Jaffna) என்ற இந்தப் திரைப்படத்தை தடை செய்ய வேண்டும் என்ற முடிவோடு B (Banned) முத்திரைச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

எமது பெருமதிப்பிற்குரிய வர்த்தகப் பெருந்தகைகளே! பேரன்புக்குரிய தமிழ் மக்களே! மேலே குறிப்பிட்ட காரணங்களை ஆழமாகப் புரிந்துகொண்டு, “லிட்டில் யப்னா” (Little Jaffna) போன்ற, எமது இனத்தைக் களங்கப்படுத்தும் திரைப்படங்களுக்கு, உங்களது பொருளாதார ஆதரவையோ, அன்றி தார்மீக ஆதரவையோ வழங்காமல் தக்க பாடம் புகட்ட வேண்டுமென தமிழ்த் தேசிய உணர்வுள்ள மக்கள் அனைவரிடமும் தமிழீழத் தேசியப் படைப்புக்களுக்கான தணிக்கைக் குழுமம் பகிரங்க வேண்டுகோள் விடுகின்றது.

**“தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்”**

| | |
|---|---|
| திரு.ம.கிருபாகரன் | திரு.க.அருளன் |
| பணிப்பாளர் | ஒருங்கிணைப்பாளர் |
| த.தே.ப.தணிக்கைக் குழுமம் | த.தே.ப.தணிக்கைக் குழுமம் |